விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 28 வெள்ளி 13.08.2021 மலர் - 2, இதழ் - 129

# கடந்த கால தவறுகள் திருத்தப்படுகின்றன


விஜயபாரதம்

இந்திய தொழில் கூட்டமைப்பின் (சி.ஐ.ஐ) வருடாந்திர கூட்டத்தில் வீடியோ கான்பரன்சிங் மூலம் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது அவர், 'இந்த சி.ஐஐ. கூட்டம் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஆசாதி கா அமிர்த மஹோத்ஸவத்தின்போது நடைபெறுகிறது. பாரதத் தொழில்துறையில் புதிய இலக்குகளை அடைய இது ஒரு பெரிய வாய்ப்பு. ஆத்ம நிர்பர் வெற்றிக்கு தொழில்துறையின் பங்கு இன்றியமையாத்து. கொரோனா தொற்றின் போதும் புதிய முயற்சிகளுடன் தொழில்துறையினர் சிறப்பாக செயல்பட்டனர். இன்றைய புதிய பாரதம், புதிய உலகத்துடன் அணிவகுக்கத் தயாராக உள்ளது. ஒரு காலத்தில் அன்னிய முதலீட்டை கண்டு பயந்த பாரதம், இன்று அனைத்து வகையான முதலீடுகளையும் வரவேற்கிறது. விரக்தியைத் தூண்டும் வகையிலான வரிக் கொள்கைகள் திருத்தப்பட்டுள்ளன. வெறும் வாழ்வாதாரமாக கருதப்பட்ட விவசாயம், தற்போது நவீன சீர்திருத்தங்கள் மூலம் சந்தைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் உள்நாட்டு பிராண்டுகள்கூட வெளிநாட்டு பெயர்களுடன் விளம்பரப்படுத்தப்பட்டன. இன்று நிலைமை மாறிவிட்டது. இங்கு தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்க மக்கள் விரும்புகின்றனர். எனவே, பாரத இளைஞர்கள் புதிதாக களத்தில் நுழையும் போது, அவர்களுக்கு தயக்கம் தேவையில்லை' என்று கூறினார். இக்கூட்டத்தில், 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொண்டு வரும் பிரதமரின் உறுதிப்பாட்டை தொழில்துறையினர் பாராட்டினர்.

# போக்சோவில் பாதிரி கைது


விஜயபாரதம்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லி புத்தூரைச் சேர்ந்த 11 வயது சிறுமி கடந்த சில வாரங்களுக்கு முன்பு ரைட்டான் பட்டியில் உள்ள தனது தாத்தா வீட்டுக்கு சென்றிருந்தார். அங்கு வீடு தோறும் சென்று ஜெபக் கூட்டங்களை நடத்திவரும் சிவகாசியை சேர்ந்த பாதிரி கிறிஸ்துதாஸ் என்பவர் அந்த சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமி தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். அதிர்ச்சி அடைந்த அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். அதனையடுத்து விசாரணை நடத்திய காவல்துறையினர், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து பாதிரி கிறிஸ்துதாசை கைது செய்தனர்.

# வெளிமாநில தொழிலாளர்களுக்கு வாடகை வீடு

கொரோனா முதல் அலையின் போது வேலையின்மை, உணவு பிரச்சனை காரணமாக ஆயிரக் கணக்கான வெளிமாநில தொழிலா ளர்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பினர். அவர்களுக்கு வேலை செய்யும் மாநிலத்திலேயே தங்கும் வசதி ஏற்படுத்தித் தர மத்திய அரசு முடிவு செய்தது. இதற்காக, அனைத்து மாநிலங்களிலும், வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கான வாடகை வீட்டு வசதி திட்டம் (ARHC) செயல்படுத்த முடிவு செய்தது. இந்த புதிய திட்டத்தின்படி, பல்வேறு மாநிலங்களில் அரசு நிதியில் கட்டப்பட்டு காலியாக உள்ள 5,734 வீடுகள் முதற்கட்டமாக அவர்களுக்கு வாடகைக்கு விடப்படும். மேலும், தனியார் பங்களிப்புடன், 400 முதல் 600 சதுர அடி பரப்பளவுகளில் வீடுகள் கட்டப்படுகின்றன. இத்திட்டத்தில் கட்டப்படும் வீடுகளுக்கான வாடகை குறைந்தபட்சம் 3,000 ரூபாயில் இருந்து துவங்கும். ஐந்து ஆண்டுகளில் 8 முதல், 20 சதவீதம் வரை, படிப்படியாக உயர்த்தும் வகையில் கட்டணங்கள் இருக்கும். இதற்கான உயர்நிலைக் குழுக்கள் விரைவில் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அய்யாகண்ணு பொறுப்பு


விஜயபாரதம்

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் அடுத்துள்ள கீழக்குறிச்சி கிராமத்தை சேர்ந்த சேவியர் என்பவர், தனக்கு 1.5 ஏக்கர் நிலத்தை சபரிநாதன் என்பவருக்கு குத்தகைக்கு கொடுத்துள்ளார். சேவியர் இறந்துவிட்ட சூழலில், அவரது வாரிசுதாரரான ரெனிடா, அந்த நிலத்தை கேட்டதற்கு சபரிநாதன் கொடுக்க மறுத்து மிரட்டி வருவதாகக் கூறப்படுகிறது. அந்த நபருக்கு ஆதரவாக விவசாய சங்க தலைவர் அய்யாக்கண்ணு ரெனிடாவின் குடும்பத்தை மிரட்டுவதாக அப்பெண் ஒரு வீடியோவில் தெரிவித்துள்ளார். மேலும், உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றால் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்வோம். எங்களது தற்கொலைக்கு விவசாய தலைவர் அய்யாக்கண்ணுவும், அரசு அதிகாரி சபரி நாதனும்தான் காரணம் என தெரிவித்துள்ளார்.

# சாதனை படைத்த தூத் டொராண்டோ



விஜயபாரதம்

அந்திர மாநிலம் ரேணிகுண்டாவி லிருந்து பால் கொண்டு செல்லும் பிரத்தியேக 'தூத் டொரான்டோ' ரயில் இதுவரை 443 முறை பயணம் செய்து, 2,503 பால் டேங்கர்கள் மூலம் சுமார் 10 கோடி லிட்டர் பாலை டெல்லிக்கு கொண்டு சென்றுள்ளது. கொரோனாவுக்கு முன்பு, டெல்லி சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள மக்களின் பால் தேவையைப் பூர்த்தி செய்ய வாராந்திர சூப்பர் பாஸ்ட் ரயில்களில் பால் டேங்கர்கள் இணைக்கப்பட்டன. ஆனால், பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டபோது, தெற்கு மத்திய ரயில்வே இதற்காக தனித்துவமான 'தூத் டொரான்டோ' சிறப்பு ரயில்களை இயக்கியது. இந்த ரயில், ரேணிகுண்டாவிலிருந்து ஹசரத் நிஜாமுதீன் ரயில் நிலையம் வரையிலான 2,300 கி.மீ தூரத்தை 30 மணி நேரத்தில் சென்றடைகிறது. இதனால் டெல்லிவாழ் மக்களின் பால் தேவைகள் பூர்த்தியாகின்றன. பால் விற்பனையாளர்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கிறது.

# கலவரத்தில் இறந்தவர்களுக்கு தர்பணம்



விஜயபாரதம்

கேரள ஹிந்துக்களால் மறக்க முடியாத ஆண்டு 1921. முஸ்லீம் பயங்கரவாதிகளால் கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான ஹிந்து இனப்படுகொலை மலபாரில் அரங்கேற்றப்பட்டது. 'மாப்ளா கலவரம்' என அழைக்கப்படும் இந்த வன்முறையில், ஆயிரக்கண ஹிந்துக்கள் கொல்லப்பட்டனர், கோவில்கள் அழிக்கப்பட்டன, பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர், கட்டாய மதமாற்றம் நடைபெற்றது, பலர் அகதிகள் ஆக்கப்பட்டனர். அவர்களின் சொத்துகள் கொள்ளை அடிக்கப்பட்டன. இந்த கொடூரமான நிகழ்வு நடந்து 100 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், இதில் இறந்த அப்பாவி ஹிந்துக்களுக்கு கடந்த அகஸ்ட் 8ம் தேதி 'பாலி தர்ப்பணம்' செய்யப்பட்டது. இதில் பல ஹிந்துக்கள் கலந்துகொண்டு தர்பணம் செய்தனர். 'பாலி தர்ப்பணம்' செய்ய முடியாதவர்கள் விளக்கேற்றி பிரார்த்தனை செய்தனர். மாப்ளா கலவரத்தில் ஈடுபட்ட பல முஸ்லீம் வெறியர்கள், அவர்களுக்கு துணை போனவர்கள், மறைமுகமாக ஆதரித்தவர்கள் என பலர், வரலாற்றுத் திரிப்பின் காரணமாக இன்று சுதந்திரப் போராட்ட வீரர்களாக கொண்டாடப்படுகின்றனர் என்பது வேதனையான விஷயம்.

# ரேஷன் அரிசி கடத்தல்



விஜயபாரதம்

திருப்பூர் – செரங்காடு பகுதியில், ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக திருப்பூர் குடிமைப்பொருள் பறக்கும் படையினருக்கு தகவல் வந்தது. அதன் பேரில் சோதனை மேற்கொள்ளப்பட்ட்து. வேன் ஒன்றில் ரேஷன் அரிசி மூட்டைகள் கொண்டு செல்லப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. வேனில் இருந்த 7.5 டன் அளவிலான 150 ரேஷன் அரிசி மூட்டைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். வேன் ஓட்டுனர் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இதுபோல ரேஷன் அரிசிக் கடத்தல் தடுக்கப்படுவதும் பிடிபடுவதும் வழக்கம்தான் என்றாலும், அவ்வழக்கில், கடத்த அவற்றில் ஓட்டுனர், துணைக்கு வந்தவர்கள்தான் பொதுவாக கைது செய்யப்படுகின்றனர். ஆனால், அதனை கொடுத்த ரேஷன் கடை ஊழியர்கள், ஏஜெண்டுகள், அதனை வாங்கி விற்கும் விற்பனையாளர்கள், பின்னணியில் உள்ள முக்கிய புள்ளிகள் எல்லாம் ஏனோ அதிகம் மாட்டுவதே இல்லை.

# கொரோனா கால கிறிஸ்தவ தேர்தல்

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த சமூக சேவகி எமி, வருவாய் துறை முதன்மை செயலரிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் 'தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் டயோசிசன் எனப்படும் கிறிஸ்தவர்களின் திருமண்டல பெருமன்றம், சேகர மன்றத்திற்கான உறுப்பினர் தேர்தல் வரும் 16ம் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் ஓட்டளிக்க 533 தேவாலயங்களில் 2 லட்சம் வாக்காளர்கள், தமிழகம், டெல்லி, கேரளா, ஆந்திரா, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து வருவார்கள். 'மூடப்பட்ட தேவாலயத்திற்குள் காலை 9:00 மணி முதல் தேர்தல் நடத்தப்படும். அன்று மாலையே ஓட்டு எண்ணிக்கை நடக்கும்' என அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா அபாயம் தீராத நிலையில், பூட்டிய தேவாலயத்திற்குள், ஆயிரக்கணக்கானோரை ஓட்டளிக்க அனுமதிப்பது, நோய் பரவலை அதிகரிக்க உதவும். தேர்தலில் போட்டியிடுவோர் ஊரடங்கு விதிகளை மீறி ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். ஹிந்துக்களுக்கு வழிபாடு நடத்த அனுமதிக்காத தமிழக அரசு, கிறிஸ்தவ தேவாலயங்களில் தேர்தல் நடத்த அனுமதிக்கலாமா? எனவே, கொரோனா தொற்று அபாயம் உள்ள காலத்தில், சட்டத்தை மதிக்காமல் தேர்தலை அறிவித்துள்ள பிஷப் தேவசகாயம், செயலர் ராஜன் மற்றும் நிர்வாகிகள் மீது, வழக்கு பதிவு செய்ய வேண்டும். அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களையும், வரும் 16ம் தேதி காவல் துறை கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும்' என கோரிக்கை வைத்துள்ளார்.

விஜயபாரதம்

# விவசாய போராட்டத்தில் விரிசல்



விஜயபாரதம்

பாரதிய கிசான் யூனியன் தேசிய தலைவர் பானு பிரதாப் சிங் தனது அறிக்கையில், 'மத்திய அரசால் இயற்றப்பட்ட புதிய விவசாய சட்டங்களில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அதனை நடைமுறைப்படுத்த ஒரு விவசாயிகள் ஆணையம் இருக்க வேண்டும். இந்த போராட்டத்தை முன்னின்று நடத்தும் ராகேஷ் திகாயத், மாநில எல்லையில் பயங்கரவாதத்தை பரப்புகிறார், அவர் 100 சதவீதம் ஊழல் செய்பவர். அவர் தனது வசதிக்காக இலக்குகளை மாற்றிவருகிறார்' என தெரிவித்தார். மேலும், சமூக விரோதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஊடுருவியது, குடியரசு தினத்தில் கலவரத்தில் ஈடுபட்டது, பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு விவசாயிகளை அழைத்தும் அவர்கள் அதனை தவிர்த்தது, போராட்டக் களத்தில் ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு இறந்தது, யோகேந்திர யாதவ் இது குறித்து வாய் திறக்காமல் இருப்பது குறித்தும் அவர் பேசியுள்ளார்.

# சட்டவிரோத கட்டடம் இடிப்பு




விஜயபாரதம்

பாட்னாவில் சன்னி வக்ப் வாரியம் சார்பில் பல மாடி வர்த்தக வளாகம் கட்டப்பட்டு வந்தது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், பழங்காலத்தில் இருந்தே இடுகாடாகப் பயன்படுத்தப் பட்ட நிலத்தில் இந்த பல மாடி கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. சர்ச்சைக்குரிய அந்த சொத்தை வக்பு வாரியம் கையகப்படுத்த சட்ட விதிகளின்படி எந்த அடிப்படையும் இல்லை என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது. இதனையடுத்து பாட்னா உயர் நீதிமன்றம், அந்த சட்டவிரோத கட்டடத்தை இடிக்க உத்தரவிட்டது. மேலும், சட்டத்தை மீறி கட்டடம் கட்ட அனுமதி அளித்த அரசு அதிகாரிகளை விசாரிக்க ஆணையம் அமைக்க மாநில அரசுக்கு உத்தரவிட்டது.


---



விஜயபாரதம்

# ஓணம் கொண்டாட தடை

கேரளாவில் கொரோனா பெருந்தொற்று இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. நாடு முழுவதுமான மொத்த கொரோனா பாதிப்பில் கேரளாவில் மட்டும் 50 சதவீத பாதிப்பு தற்போது பதிவாகி வருகிறது. இந்நிலையில், ஓணம், கிருஷ்ண ஜெயந்தி, விநாயகர்சதுர்த்தி, ஆயுதபூஜைபோன்றபண்டிகைகள் அடுத்தடுத்து வரவுள்ளன. இதனால், மக்கள் பெருமளவில் கூட வாய்ப்புள்ளது. எனவே, வரவுள்ள ஓணம் உள்ளிட்ட விழாக்களையொட்டி, உள்ளூர் மட்டத்திலான கட்டுப்பாடுகள் 12ம் தேதி முதல் அமலுக்கு வருகின்றன. இவ்விழாக்களை பொது இடங்களில் கொண்டாடவோ, பெருமளவில் கூடவோ தடை விதிக்கப்படுகிறது. புதிய பாதிப்பு அதிகமாக உள்ள இடங்களில் பரிசோதனை அதிகரிக்கப்படும். சபரிமலை ஐயப்பன் கோவில் யாத்திரை 15ம் தேதி தொடங்குகிறது. கூட்ட நெரிசலை தவிர்க்க, நாள் ஒன்றுக்கு 15 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என மாநில அரசு தலைமை செயலாளரும், மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய தலைவருமான வி.பி.ராய் தெரிவித்துள்ளார். முன்னதாக, முஸ்லிம்களை திருப்திப்படுத்த அவர்களின் பக்ரீத் பண்டிகைக்கு கேரள கம்யூனிச அரசு அளித்த தளர்வுகள்தான் இந்த விபரீதத்திற்கு காரணம் என குற்றம் சாட்டப்படுகிறது.



# வன்ம ஊடகங்கள்

விஜயபாரதம்

டோக்கியோ ஒலிம்பிக் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார் பாரத வீரர் நீரஜ் சோப்ரா. இதுகுறித்து ஆங்கில நாளேட்டில் ஒரு கட்டுரை வெளியானது. அதில் நீரஜ் சோப்ராவின் பயிற்சியாளர் என கூறிக்கொண்ட உவே ஹான், 'ஒலிம்பிக் பயிற்சி குறித்து மத்திய அரசிடம் எந்த திட்டமும் கிடையாது, விளையாட்டு அமைப்புகள் எங்களுக்கு உதவவில்லை, வீரர்களுக்கு உயர்தர உணவுகளை வழங்குவதில்லை, பாரத அதிகாரிகள் என்னை மிரட்டினர்' என தெரிவித்ததாக செய்தி வெளியானது. இதனை பிரதமர் மோடி, பா,ஜ.க மீது உள்ள வன்மத்தால் கலைஞர் செய்திகள் உட்பட சில தொலைக்காட்சிகள் வெளியிட்டு தங்களது வன்மத்திற்கு ஆறுதல் தேடின. ஆனால், இக்கட்டுரை வெளியான மறுநாளே அந்த செய்தி தவறானது என நீரஜ் சோப்ரா மறுத்ததுடன் பாரத அரசு தனக்கு செய்த உதவிகளை பட்டியல் இட்டு, பிரதமர் மோடிக்கு தனது நன்றியினை தெரிவித்தார். உவே ஹான் பயிற்சி நீரஜுக்கும் பாரத அரசுக்கும் திருப்தி அளிக்கவில்லை என்பதால் அவரை நீக்கிவிட்டு ஜெர்மனியை சேர்ந்த கிளாவ்ஸ் பார்டோனியெட்ஸ் என்ற பயிற்சியாளரை அமர்த்தியது. அதனால்தான், காழ்ப்புணர்ச்சியில் உவே ஹான் இப்படி கருத்து தெரிவித்தார் என்பது கூடுதல் தகவல்.

# வேட்பாளர் வழக்குகளை மக்கள் அறியலாம்

குற்றப் பின்னணி கொண்ட தேர்தல் வேட்பாளர்களின் விவரங்களை அந்தந்த கட்சிகள் தங்களில் இணையதளத்தின் முகப்புப் பக்கத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் அதற்காக தனி தலைப்பு வழங்கலாம். இந்திய தேர்தல் ஆணையத்துக்கு, குற்றப் பின்னணி உடைய வேட்பாளர் விவரங்களை குறித்த தகவல்களை மக்கள் எளிதாக அறிய வசதியாக, ஒரு பிரத்தியேக மொபைல் ஆப் உருவாக்க வேண்டும். இவற்றில் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட உடன் அவரது விவரங்களை 48 மணி நேரத்தில் வெளியிட வேண்டும். அதனை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த சமூக ஊடகங்கள், இணையதளங்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள், விவாதங்கள், துண்டு பிரசுரங்கள் உள்ளிட்ட முயற்சிகளை எடுக்க வேண்டும். இது குறித்த நீதிமன்ற அவமதிப்பு விவகாரங்களைக் கையாள தேர்தல் ஆணையம் ஒரு பிரத்தியேக நிதியத்தை 4 வார காலத்திற்குள் உருவாக்க வேண்டும்' என உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.




விஜயபாரதம்

# டெல்லி அரசு குறித்து வி.ஹெச்.பி.




விஜயபாரதம்

விஷ்வ ஹிந்து பரிஷத்தின் மத்திய இணை பொதுச் செயலாளர் டாக்டர் சுரேந்திர ஜெயின், செய்தியாளர்கள் சந்திப்பில் பேசுகையில், 'கெஜ்ரிவாக் தலைமையிலான டெல்லி அரசு, ஹஜ் இல்லத்தை அரசு நிலத்தில், அரசு பணத்தில் கட்டுவதை ஏற்கமுடியாது. கெஜ்ரிவால் அரசு, முஸ்லிம்களை திருப்திப்படுத்துவதிலும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயல்படுவதிலும் ஈடுபாடு காட்டுகிறது. டெல்லியை ஜிஹாதிகள், ஹிந்து விரோதிகள், தேச விரோதிகளின் தலைநகராக மாற்ற முயல்கிறது. அதனை வி.ஹெச்.பி அனுமதிக்காது. இறந்த முஸ்லீம் மருத்துவர் அனஸ் முஜாஹித் வீட்டிற்கு சென்று அவருடைய குடும்பத்திற்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்கிறார், ஆனால் அதே கொரோனாவால் பலியான டாக்டர் கே.கே. அகர்வால் போன்ற டஜன் கணக்கான ஹிந்து மருத்துவர்களுக்கு அவர் ஏதாவது செய்தாரா கெஜ்ரிவால் என்பதை டெல்லி மக்கள் சிந்திக்க வேண்டும். வரி செலுத்துவோரின் பணத்தை பசுவதையில் ஈடுபட்ட அக்லக் உள்ளிட்ட ஜிஹாதிகளுக்கு செலவழிக்கும் கெஜ்ரிவால், முஸ்லிம் ஜிஹாதிகளால் பலியான அங்கித் சக்சேனா, துருவ் தியாகி, ரியா கவுதம், யோகேஷ் குமார், டாக்டர் பங்கஜ் நாரங், அங்கித் கார்க், ராகுல் ராஜ்புத், ரத்தன் லால் உள்ளிட்டோரை நினைத்து பார்ப்பதில்லை. அவர் முல்லா, மௌல்வி, மியூசின்களுக்கு சம்பளம் அளிக்கிறார். ஆனால் கொரோனா காலங்களில்கூட ஹிந்து தர்மத்தை பாதுகாத்த ஏழை பூஜாரிகள் புரோகிதர்களுக்கு உதவவில்லை. லவ் ஜிஹாத் விவகாரத்தில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை' என குற்றம் சாட்டினார்.

---

# டாலர் கடத்திய முதல்வர்

கேரள தங்கம் கடத்தல் வழக்கில் பரபரப்பான திருப்பமாக, அந்த வழக்கின் முக்கிய குற்றவாளியில் பிளஸ் சரித் வாக்குமூலம் அளித்துள்ளார். அதில், கடந்த 2017ல் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்ற முதல்வர் பினராயி விஜயன், ஒரு பார்சலில் கட்டு கட்டாக டாலர்களை எடுத்து சென்றார். அந்த டாலர் கடத்தலுக்கு ஸ்வப்னா சுரேஷ், ஐக்கிய அமீரக தூதரக அதிகாரி ஜெனரல் ஜமால் அல் ஜாபி, கலீத் முகமது அல் சௌக்ரி, எம் சிவசங்கர் ஆகியோரும் உதவினர் என கூறினார். மேலும், தங்கக் கடத்தலில் அவர்களின் பங்கு என பல்வேறு விஷயங்களை சுங்கத்துறை அதிகாரிகள் முன்னிலையில் ஒப்புக்கொண்டுள்ளார். இது பினராயி விஜயனுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப் படுகிறது.




விஜயபாரதம்

# வலையில் சிக்கிய மீம்கள்



1 லிட்டர் பெட்ரோலில் ரூ. 31 ஒன்றிய அரசுக்கு செல்கிறது" - நிதியமைச்சர் பி.டி.ஆர்

சரி, 31 ரூவா மத்திய அரசுக்கு போவுது... மீதி எங்க போவுதுனு சொல்லுங்க...!!!





## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# கோவில்களுக்கு ஒலிப்பெருக்கி

குஜராத்தின் வடோதாராவில் உள்ள 108 கோவில்களில் ஹனுமான் சாலிசா, பக்தி பாடல்களை தினமும் இரண்டு முறைகள் ஒலிபரப்ப வசதியாக ஒலிபெருக்கியை வழங்கி வருகிறது 'மிஷன் ராம் சேது' என்ற ஒரு உள்ளூர் அமைப்பு. இது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சியில் இந்த அமைப்பின் நிர்வாகிகள், வடோதரா நகர தலைவர் டாக்டர் விஜய் ஷா, நகர பொது செயலாளர், பா.ஜ.க தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர். 'கொரோனா காலத்தில் கோவில்களுக்கு மக்கள் வர சற்று கடினமாக இருப்பதால், அவர்கள் வீட்டில் இருந்தபடியே ஹனுமன் சாலிசா, ஆரத்தி, பிற பக்தி பாடல்களை கேட்டு பயனடைய வேண்டும் என்பதற்காக இந்த முயற்சி துவங்கப்பட்டது. முதற்கட்டமாக, இதற்கு பதிவு செய்துகொண்ட 78 கோவில்களுக்கு ஒலிப்பெருக்கிகள் வழங்கப்படுகின்றன' என மிஷன் ராம் சேது தலைவர் தீப் அகர்வால் தெரிவித்தார்.

விஜயபாரதம்



# வீழ்கிறதா ஆப்கன் ?



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானின் 60 சதவிகித நிலப்பரப்பை தலிபான்கள் தற்போது கட்டுப்படுத்துகின்றனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மிக வேகமாக முன்னேறி வருகின்றனர். 30 நாட்களில் தலைநகர் காபூலை அவர்கள் தனிமைப்படுத்திவிடுவார்கள். 90 நாட்களில் கபூலை அவர்கள் கைப்பற்ற அதிக வாய்ப்புகள் உள்ளது என அமெரிக்க பாதுகாப்பு அதிகாரியை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் திருமணம் செய்வதற்கு எனகூறி, அங்குள்ள 12 வயதிற்கு மேற்பட்ட பெண்கள், குழந்தைகள் என அனைவரையும் வலுக்கட்டாயமாக கடத்தி செல்கின்றனர் தலிபான்கள் என குற்றம் சாட்டப்படுகிறது.

# ராணி அகல்யா பாய் ஹோல்கர்



விஜயபாரதம்

இந்தூர் ராணி அகல்யா பாய் ஹோல்கர் மராட்டிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய பெயர். இவர் மராட்டிய மக்களுக்கு விழிப்புணர்வூட்டி முகலாயர்களுக்கு எதிராக போராட எழுச்சி தந்தவர். இவர் கொடுத்த ஆதரவில்தான் மகாஜி ஷிண்டே மராட்டிய சாம்ராஜ்யத்தை சூழ்ச்சிக்காரர்களின் பிடியிலிருந்து காத்தார். இவர் ஆட்சி காலத்தில் நகர மக்கள் போற்றும் வகையில் நல்ல சாலைகளும் கல்விக்கூடங்களும் மருத்துவமனைகளும் அமைத்துள்ளார்.

இவர் சிவபெருமானின் தீவிர பக்தர். 'சதுர்தாம்' என்ற நான்கு சிவ வழிபாட்டுத் தலங்களை மிக நேர்த்தியாக தேர்ந்தெடுத்து அமைத்திருக்கிறார். நாற்பத்து மூன்று தீர்த்தக் குளங்களை ஏற்படுத்தியிருக்கிறார். துவாதச லிங்க க்ஷேத்திரங்கள் என்று 97 வகைப்பட்ட ஆலயங்களை கட்டிய பெருமை இவரையே சேரும். அதுமட்டும் இல்லாமல், இந்த ஆலயங்களை பராமரிக்கவும், அன்றாட வழிபாடுகள் நடைபெறவும் பல லட்ச ரூபாயை வாரி வழங்கியுள்ளார் ராணி அகல்யாபாய்.

தீவிர சிவபக்தையான இவர், அன்றாடம் பிரம்ம முகூர்த்த நேரமான அதிகாலை 4 மணிக்கு நர்மதை நதியிலிருந்து மண் எடுத்து வந்து ஒரு கோடி லிங்கத்தைப் பிடித்து, அந்தணர்களை கொண்டு ருத்ர ஜபம் ஜபித்து, வழிபாடுகள் செய்து, பகல் நேர உச்சி வேளையில் நர்மதை நதியில் கரைத்து விடுவார். இந்த புனிதக் கைங்கரியம் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதை 'கோடிலிங்கார்கனம்' என்று அழைக்கின்றனர்.

ராணி அஹல்யாபாயின் தர்பார் மண்டபம் 108 ருத்ராட்ச லிங்கம், நவமணிகளின் ஒவ்வொரு ரத்னத்திலும் கட்டை விரல் அளவு சிவலிங்கங்கள், நர்மதை நதியில் இருக்கும் மார்பிள் கல்லைக் கொண்டு செய்யப்பட்ட பாண லிங்கங்கள் என்று, அற்புத கைலாயமாக தெய்வீக அம்சங்களோடு அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

ராமேஸ்வரம் ராமநாத சுவாமிக்கும், காசி விஸ்வநாதருக்கும் அன்றாடம் காசி தீர்த்தமும், கோடி தீர்த்தமும் அபிஷேகங்களுக்கு கொண்டு சேர்ப்பிக்க வழிவகுத்த மாபெரும் புண்ணியவதி இவர். இவரால் புணரமைக்கப்பட்ட இன்றைய காசி விஸ்வநாதர் கோவில், கேதார்நாத், பத்ரிநாத் மற்றும் ஆயிரக் கணக்கான கோவில்கள் உள்ளவரை இவர் புகழ் அழியாது என்பது திண்ணம்.